# தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை - 2018

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1. இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் கூற்றுக்கள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | | |
| (அ) | காகிதாதிகள் இருப்பு | 220,448 | 327,600 | 107,152 | ரூபா 1,955 இற்கான பௌதீக இருப்பு மிகை சரியாக புத்தகங்களில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் ரூபா 109,107 இற்காக பௌதீக இருப்பு பற்றாக் குறைகளுக்காக 2018.12.28 திகதி சபை பத்திர இலக்கம் 221/2018 கீழ் சுட்டக்காட்டியிருந்ததுடன் அதில் பொறுப்பு சொல்ல வேண்டியவர்களிடம் அறவிடப்பட வேண்டும் என்பதாகும். அதன் பிரகாரம் குழு ஒன்று நியமனம் செய்து பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோத்தர்களை இனங்கண்டு ஏற்பட் டுள்ள நட்டத்தை 2019 நிதி ஆண்டின் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிலின் பிரகாரம செய்படுவற்காக |
| (அ) | முன்னோடி நிர்வாக அதிகார சபையின் வருமானம் | 1,379,100 | 1,672,000 | 292,900 | இந்த வித்தியாசத்திற் கான காரணத்தை கண்டறிந்து அறிவிப்பதற்காக குறித்துக் கொண்டேன் | வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கு |

**1.5.2 தொங்கல் கணக்கு**

| விடயம் | தொகை | தொங்கல் தன்மையில் காணப்பட்ட காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** | | |
| தொங்கல் கணக்கு | 480,900 | 5 வருடங்கள் | கணக்காய்வில் சுட்டிக் காட்டியுள்ள மீதி 2014 ஆண்டின் போது மேற்கொள்ள ப்பட்ட கணக்குசார் சீராக்கல் ஒன்றின் மூலம் எழுந்துள்ள மீதி ஒன்றாகும். இதனை தீரப்பதற்காக குறிப்பிட்ட அனைத்து கணக்குகளும் பரிசோதனை செய்யப்பட்டு வருவதுடன் இது வரை கண்டுபிடிக்க முடியாமல் போனது எனவும் எதிர்க்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பணிவுடன் அறிவிக்கிறேன். | தொங்கல் கணக்கு தீர்ப்பதற்கு |

**1.5.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| விடயம் | தொகை | சமர்பிக்கப்படாத காணக்காய்வு சான்றுகள் | முகாதைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **ரூபா.** | | | |
| கணக்காய்வு ஐய வினாக்கள் | 15,940,525 | பதில் அளிக்கப் படாமை | உரிய பத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்காக மிக விரைவில் பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | 4 மாதத்திற்கு மிகையான காலம் காணப்படும் ஐய வினாக்களுக்காக கூடிய விரைவில் பதில் வழங்குவதற்கு |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 முற்பணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,796,315 தொகைக்கான முற்பண மீதிகள் 20 வருடங்களை விட மிகையான காலம் அறவிடப்படாமல் காணப்பட்டதுடன் அம்மீதி எந்த ஆண்டு முதல் காணப்படுகின்றவை என இனங்கண்டிருக்கவில்லை. | இந்த மீதிகளை இனங்காண்பதற்காக பதவியணியை ஈடுபடுத்தி கூடிய முயற்சி எடுத்த போதிலும் கோவைகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக இது வரை கண்டுபிடிக்க முடியாமல் காணப்பட்டது என அறிவிக்கின்றேன். இது தொடர்பாக எதிர்காலத்தில் திறைசேரியில் இருந்து ஆலோசனைகளை பெற்று அதன்படி செயற்படுவதற்கு குறித்துக் கொண்டேன் என அறிவிக்கிறேன். | அறுதியாக இனங்கண்டு தீர்ப்பதற்கு |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 371 பிரிவு (இ) | வழங்கப்பட்ட முற்பணம் அது வழங்கப்பட்டிருந் கருமம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் தீர்க்கப்பட வேண்டு மெனினும் ரூபா 386,670 தொகையான முற்பணங்களில் ரூபா 140,599 இற்கான தொகையொன்றினை தீர்ப்பதற்காக 30 நாட்கள் முதல் 85 வரையான காலம் கழிந்துள்ளது. | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக் கொள்கிறேன். எவ்வாறாயினும் எதிர் காலத்தில் நி.பி 371 பிரகாரம் கருமம் முடிக்கப்பட்டிருந்த உடன் தீர்க்கும் படி அறிவுரை வழங்குவதற்கு குறித்துக் கொண்டேன். அதேபோல் உரிய உத்தியோக த்தர்களை அறிவுறுத்தி கடிதம் இத்துடன் இணைக்கப்பட்டிருந்துடன் அவ்வாறு செய்யாத உத்தியோத்தர்களின் மாதாந்த சம்பளத்தில் இருந்து முற்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | கருமம் முடிவடைந்த உடன் தீர்ப்பதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ)i. | 2008 இன் 01 ஆம் இலக்க போதை மருந்துகள் மற்றும் உளத் தூண்டல் பொருட்கள் சட்ட முரணாக வியாபாரம் செய்வதற்கு எதிராக அங்கீ கரிக்கப்பட்ட சட்டத்தை செயற்படுத்துவதற்காக அங்கீகரிக்கப் பட்ட 2010 இன் 01 ஆம் இலக்க முன்னோடி நிர்வாக அதிகார சபை யின் கட்டளை VI ஆம் பகுதியின் 28(அ) பிரிவு | அனைத்து பதிவு செய்யப்பட்ட வியாபாரியினால் மற்றும் இறுதி பயன் படுத்துபவரினாலும் அவர்களின் பதிவு செய்தலை வருடாந்தம் புதுப்பித்துக் கொள்ள வேண்டியிருந்ததுடன் அவரினால் அந்த பதிவு முடிவுரும் தினத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் கட்டளைகளின் “ஆ” பட்டோலையில் குறிப்பிடப்பட்டுள்ள முறையே 8 ஆவது மற்றும் 11 ஆவது படிவங்களின் பிரகாரம் குறிப்பிட்ட விடயத்திற்கான விண்ணப்பத்திரம் ஒன்று அதிகார சபைக்கு சமர்பிக்கப் பட வேண்டியிருந்த துடன் சட்டத்தின் 1 ஆம் பகுதியின் 6(அ) பிரிவின் பிரகாரம், இறக்குமதியாளர் ஒருவருக்கு அல்லது ஏற்றுமதியாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த அனைத்து அனுமதிப் பத்திரங்களும் வருடாந்தம் புதுப்பிக்க வேண்டியிருந்ததுடன், அவ்வாறான அனைத்து இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதியாளர்களி னாலும் அனுமதிப் பத்திரம் வழங்கப் பட்டிருந்த நாள் முதல் அல்லது ஏதேனும் புதுப்படுத்து தல் மேற்கொள்ளப் பட்ட நாள் முதல் ஒரு வருட காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் அதிகார சபைக்கு விண்ணப்பப்பத்திரம் ஒன்று சமர்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செயற்பட்டிருக்காத 12 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | இது தொடர்பாக 2010 இன் 01 இலக்க முன்னோடு நிர்வாக அதிகார சபையின் கட்டளைக்கான வர்த்தமானியின் vi ஆம் பகுதியின் 29 ஆம் பிரிவு மற்றும் i ஆ பகுதியின் 07 ஆம் பிரிவின் படி சட்டத்தின் கீழ் வழங்கியிருந்த ஏதேனும் கட்டளை ஒன்றினை மீறும் சந்தர்ப்பமொன்றின் போது அதிகார சபையினால் பதிவினை/ அனுமதிப் பத்திரத்தினை இரத்து செய்வதற்கு இயலும் என குறிப்பிடப்படுவதுடன் அவ்வாறாயினும் இரத்து செய்வதற்கு முன்னர் விண்ணப்பித்த நபருக்கு காரணங்களை அறிவிப்பதற்கு சந்தர்ப்பமொன்று வழங்கப்பட வேண்டுமென குறிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஒரே தடவையில் பதிவினை / அனுமதிப் பத்திரத்தினை இரத்து செய்யாமல் குறிப்பிட்ட அனுமதிப் பத்திரத்திற்கு உரிய நிறுவனத்திடம் விடுதலைக்கான காரணங் களை விசாரித்தல் மேற்கொள்ளப்படும். தற்போது இறுதியாக பயன்படுத்துவோர் முன்னைய அனுமதிப்பத்திரம் காலாவதியாக பின்னர் தமக்கு இரசாயனப் பொருட்கள் தேவைப்படும் சந்தர்பங்களில் மாத்திரம் அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பத்துடன், அனேகமான சந்தர்பங்களில் நீண்ட காலத்திற்கு பின்னர் மீண்டும் புதுப்பித்தலுக்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில் எழுத்து மூலக் கூற்றொன்று அனுமதிப்பத்திர உரிமையாளர்களிடம் பெற்றுக் கொள்ளல் மேற்கொள்ளப்படும் அனுமதிப்பத்திரம் வழங்குதல் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக தற்போது மென்பொருள் தரவு முறைமையொன் றினை வடிவமைப்பதற்கு அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. | பதிலின் பிரகாரம் உரிய சான்றுகள் கோவையில் உட்படுத்துவ தற்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | 2008 இன் 1 ஆம் இலக்க போதை மருந்துகள் மற்றும் உளத் தூண்டல் பொருட்கள் சட்ட முரணாக வியாபாரம் செய்வதற்கு எதிராக அங்கீக ரிக்கப்பட்ட சட்டத்தின் கட்டளைகள் | அனுமதிப்பத்திரமொன்று விண்ணப்பித்து விண்ணப்பதாரர் களினால் முன்னோடி நிர்வாக அதிகார சபைக்கு வழங்கப்படும் விண்ணப்பங்களில் விண்ணப்பங்கள் கிடைத்த திகதியை குறிப்பிடுவதற்கும் விண்ணப்பத்தை பரிசோதனை செய்யும் உத்தியோகத்தரின் பெயர் மற்றும் விண்ணப்பத்திரத்தை அங்கீகரிக்கும் உத்தியோகத்தரின் பெயர் குறிப்பிடுவதற்கு உரிய இடத்தில் பூர்த்தி செய்திருக்காத சந்தர்ப்பங்கள் அதிகார சபையின் பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் ஒருவரின் முறையான பரிசோதனை மற்றும் முறையான அங்கீகார த்துடன் அல்லது இன்றி விண்ணப்பங்களில் குறைபாடுகள் காணப்பட்டன. | குறைபாடு என புரிந்த பின்னர் சரியான முறை யில் செயற்படுவதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் நடவடிக்கைகள் எடுத்திரு ந்ததுடன் ஏற்பட்டுள்ள தவறான நிலைமைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறைபாடு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக |
| iii. | 2008 இன் 01 ஆம் இலக்க போதை மருந்து கள் மற்றும் உளத்தூண்டல் பொருட்களை சட்ட முரணாக வியாபாரம் செய்வதற்கு எதிராக அங்கீ கரிக்கப்பட்ட சட்டத்தை அமுல் நடத்து வதற்காக அங்கீகரிக்கப் பட்ட 2010 இன் 01 ஆம் இலக்க முன்னோடி நிர்வாக அதிகார சபையின் கட்டளையின் IV ஆம் பகுதியில் 15 ஆம் பிரிவின் பிரகாரம், சட்டத்தின் முதலாவது பட்டோலையின் I ஆம் அட்ட வணையில் மற்றும் II ஆம் அட்டவணை | அறுதியாக குறிப்பிட் டுள்ள ஏதேனும் பண்டங்கள், அனைத்து அனுமதிப் பத்திரதார ரான இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதி யாளரினால் அதிகாரச் சட்டத்தின் ‘அ’ பட்டோலையில் காட்டப்பட்டுள்ள 5 ஆம் படிவத்தின் பிரகாரம் அப்பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி, பயன்படுத்தல், உற்பத்தி, வினியோகித் தல் தொடர்பாக பிரதிபலிக்கும் காலாண்டு அறிக்கைகள் அதிகார சபைக்கு ஒப்படைக்க வேண்டும் என குறிப்பிட்பட்டிருந்த போதிலும் உரிய முறையில் காலாண்டு அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன என அவதானிக்கப்பட்டது. | தற்போது அக் காலாண்டு அறிக்கைகள் உரிய முறையில் அதற்கு உரிய பதிவேட்டின் பதிவு செய்தல் மேற்கொள்ள ப்படுகின்றது. | உரிய காலத்தில் குறிப்பிட்ட அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2009 ஏப்ரல் 04 ஆம் திகதியிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை, 2009 ஜூன் 17 ஆம் திகதிய 09/2009(I) இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2017 ஏப்ரல் 19 திகதிய 03/2017 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | இந்த சுற்றறிக்கை களின் அறிவுரைகளின் பிரகாரம் அனைத்து நிறுவனங்களினதும் பதவியணியினர் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் என்பவற்றினை பதிவு செய்வதற்காக விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்த வேண்டும் என பிரேரிக்கப்பட்டி ருந்த போதிலும் நவதிகந்த நிலைய த்தின் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை. | 2018.10.06 இடி தாக்கிய தால் கைவிரல் அடையாள இயந்திரம் செயற்படாமல் காணப் பட்டதுடன் அதனை திருத்துவதற்காக 2018.10.08 ஆம் திகதி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2019.05.13 திகதி நிலையத்திற்கு கிடைத்ததுடன் அன்று மீண்டும் ஒரு முறை செயற்படாமல் காணப்பட்டது. அதே போல உள்வருதல் வெளிச் செல்லல் சரியான முறையில் நாளாந்த ஒப்பம் பதிவேட்டில் நிலைய முகாமையாளரின் முன்னிலையில் அல்லது ஆலோசகர் ஒருவரின் முன்னிலையில் பதிவு செய்யப்படுகிறது என அறிவிக்கிறேன். | சுற்றறிக்கையி ன் பிரகாரம் செயற்படு வதற்காக |
| (ஈ)i. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையில் 2006 - இன் பிரிவு 4.2.1(அ) மற்றும் (உ) | பெறுகை நிறுவனத்தினால் குறைந்த அளவு மூன்று வருட காலத்திற்கு உத்தேச பெறுகை அலுவல்கள் பிரதான பெறுகை திட்டத்தில் பட்டியல் இடப்பட்டிருக்க வேண்டுமெனினும் நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் பெறுகை திட்டம் ஒரு வருடத்திற்கு வரையறுக்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு மிகைப்படாத காலத்தில் தொடர்ச்சியாக நாளதுவரை ஆக்கப்பட முடியுமெனினும் 2018 ஆண்டிற்காக 2018 ஜனவரி 30 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட பெறுகை திட்டம் 10 மாதங்களுக்கு 10 மாதத்தின் அண்மித்த காலப் பகுதியில் அதாவது நவம்பர் 29 திகதி வரை ஏழாவது தடவையாக திருத்தம் அங்கீகரிக்கப்பட்டிருந்து. | கணக்காய்வு அவதானிப்புகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையில் பொறுகை நடவடிக்கை 2018/02/16 திகதி வரை நிர்வாக பகுதியில் பொறுப்பில் இருந்தது. அதன் பின்னர் முகாமைத்துவ தீர்மானம் ஒன்றின் பிரகாரம் அதன் முக்கிய பகுதி கணக்குப் பகுதிக்கு சாட்டப்பட்டது. அதன் பிரகாரம் கணக்காய்வு ஐயவினா வில் குறிப்பிட்டுள்ளவாறு அத்தியவசிய விடயங்கள் அடிக்கடி ஏற்பட்டமை யினால் திருத்தங்கள் மேற்கொள்ள நேரிட்டிருந்தது. அதே போல 2018 ஆண்டு முதல் எதிர்வரும் 03 வருடங்களுக்காக பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | பதிலின் பிரகாரம் செயற்படு வதற்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | 2006 அரச பெறுகை கோவையின் பிரிவுகள் 8.12.3 (அ),(ஆ),(இ) | குறிப்பிட்ட விவரக் குறிப்புக்களுக்கு இணங்க கிடைத்திருந்தது என நிலையப் பொறுப்பு அதிகாரி ஒருவர் அல்லது தொழில் நுட்ப உத்தியோத்தர் ஒருவர் பரிசோதனை மேற்கொண்டு சான்று படுத்தியிருக்காமல் ரூபா 4,211,060 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் பெறுகை அலுவல்கள் சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்ததற்காக |
| (உ) | 2015 மே 25 திகதியில் PED/1/2015 இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 3.5 | இதன் பிரகாரம் ஏனைய கடமை களுக்காக வாகனங்கள் பயன்படுத்துவதற்காக அங்கீகாரம் வழங்கி யிருக்காத தலைவர் 2018 ஜூன் மாதம் முதல் 2019 பெப்ரவரி மாதம் வரை PF-9007 இலக்க வாகனம் 12,334 கி.மீ. தூரம் அங்கீகாரம் இன்றி ஓடியியிருந்தது. | இது தொடர்பாக பரிசேதனை மேற்கொள் வதற்கு சட்டமும் ஒழுங்கும் பிரிவின் மேலதிகச் செயளாலரின் COPE/2019/01 இலக்கம் கொண்ட 2019.05.27 திகதியின் கடிதத்தின் மூலம் குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டி ருந்ததுடன் அதன் அறிக்கை கிடைத்த உடன் தீர்மானிக்கப்பட்ட பதில் ஒன்று அனுப்புவதாக அறிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையி ன் பிரகாரம் செயற்படுவத ற்கு |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக செயற்பாட்டு விளைவுகள் ரூபா 28,291,721 இற்கான பற்றாக் குறை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக் குறை ரூபா 34,080,828 தொகை இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,789,107 இற்கான வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு ஏனைய செயற்பாட்டு செலவுகள் ரூபா 13,343,161 இனால் குறைவடைதல் அரசாங்க மானியம் ரூபா 14,625,999 இனால் அதிகரித்தல் மற்றும் INGSA மானியங்கள் ரூபா 2,752,400 தொகை கிடைத்தல் பிரதானமான காரணமாகியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டின் போது சமூக அடிப்படை முகாம்கள் செயற் திட்டங்களின் கீழ் திட்டமொன்று இன்றி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 642,403 தொகை பெறுமதியான பண்டங்கள் நவதிகந்தய மற்றும் தலங்கம நிலையத்தில் பயன்படுத்தப்படாமல் கலஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | 2017 ஆண்டின் போது சமூக அடிப்படை முகாம்கள் செயற்திட்டத்திற்காக தலைமை அலுவலத்தினால் கொல்வனவு செய்திருந்த பண்டங்கள் நிலையத்தின் தேவைகளின் மீது வழங்கப்பட்டதுடன், உரிய பண்டங்கள் தேவைகளுக்கு ஏற்ப பயன்படுத்தப்பட்டதுடன் மீதியான பண்டம் பாதுகாக்கப்பப்பட்ட நிலையில் கலஞ்சியங்களில் | அழிவடைவற்கு இடமளிக்காது பயன்படுத்துவத ற்காக |

| | | |
|---|---|---|
| | காணப்படுகின்றன என அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அந்த பண்டகளும் எதிர்காலத்தில் தேவைகளுக்கு ஏற்ப பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என கருணையுடன் அறிவிக்கிறேன். | |

**3.2 இணங்கானப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,594,165 தொகை செலவிடப்பட்டு 2016 பெப்ரவரி 05 திகதி நவதிகந்தய நிலையத்தில் மின் ஊடுகடத்தி ஒன்று பொருத்தப்பட்டிருந்த போதிலும் அதனது உத்தரவாத காலப்பகுதி யில் செயற்படாதிருந்த போதிலும் அதனை பழைய நிலைக்கு ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த நிலையம் உயர்வான பூமியொன்றில் அமைந்துள்ளதுடன் நிலையத்திற்கு முன் பகுதியில் இலங்கை மின்சார சபையின் 33000v டிரான்ஸ்போமர் ஒன்று பொருத்தப் பட்டிருந்த காரணத்தினாலும் நிறுவனத்தில் தென்னைத் தோட்டம் ஒன்று காணப்படுவதினாலும் அந்தப் பகுதிக்கு மிகையான மழை பெய்யும் காலங்களின் போது அதிகம் இடி மின்னல் தாக்கங்கள் அடிக்கடி நிகழ்கின்றது என கருனையுடன் அறிவித்துக் கொள்கிறேன். இதன் பிரகாரம் தென்னை மரங்களுக்கு மின்னல் தாக்கம் ஏற்படல், மின்சார பிளக் அகற்றப்பட்டிருந்த போதிலும் பண்டங்களுக்கு மின்னல் தாக்கம் பல வருடங்களாக நடைபெறுகின்றது. மின் தாக்கத்தில் அழிவடைந்த சில பொருட்கள் தற்போது திருத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய பண்டங்களை திருத்துவதற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என அறிவிக்கிறேன். | தேவைகளை இனங்கண்டு சரியான விவரக் குறிப்புகளின் படி கொள்வனவு செய்தல் மேற் கொள்வதற்காக |

### 3.3 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நவதிகந்த நிலையத்தில் 2018 ஆண்டின் போது சிகிச்சைக் காக சேர்க்கப்பட்ட 432 சேவை பெறுநர் எண்ணிக்கை யில் 37 பேர் 1 நாள் முதல் 38 நாட்கள் கழிந்த பின்னர் அனுமதியும் இன்றி வெளியேறியிருந்ததுடன் தலங்கம நிலையதில் 2017 ஆண்டின் போது 15 பேர் தப்பி ஓடியிருந்தனர். இவை நிலையத்தின் பாதுகாப்பு வேலைத்திட்டம் போதியள வாக காணப்படாமை, ஆலோசர்களினால் அவர்களை தடுத்து வைப்பதற்கு பொதுமுயற்சி ஒன்று எடுக்கப்படாமை ஆகிய விடயங்கள் பிரதிபலிக்கப்பட்டன. | 2018 ஆண்டின் போது சிக்கனமாக சேர்க்கப்பட்ட 432 சேவை பெறுனர் எண்ணிக்கையில் 37 பேர் 1 நாள் முதல் 38 நாட்கள் வரை பின் கடந்த பின்னர் அனுமதியின்றி வெளியே சென்றிருந்தனர். அதற்காக பின்வரும் காரணங்கள் தாக்கத்தை ஏற்படுத்தியது என கருணையுடன் சுட்டிக் காட்டிகின்றேன். நிறுவனத்தின் பாதுகாப்பிற்காக சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் மாத்திரம் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் 18 ஏக்கர் விசாலமான தோட்டம் மற்றும் பிரதான நுழைவு வாயிலை பாதுகாக்கும் பொறுப்பாக உள்ளனர். சிகிச்சை பதவியணிகள் 22 ஆலோசக உதவியாளார்களின் தேவை இருந்த போதிலும் 13 ஆலோசகர் உதவியாளர்கள் மாத்திரம் கடமையாற்றுகின்றனர். மேற்குறிப்பிட்டுள்ளவாறு போதியளவு ஆலோசக உதவியாளர்கள் இன்மை அனுமதியின்றி வெளியேறல்களை பாதித்துள்ள காரணமாகும். மேலும் உரிய உத்தியோகத்தர்கள் நாளாந்த 3 சேவை முறைகளுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டியிந்தனர். | போதியளவு பாதுகாப்பு வேலைத்திட்டம் ஏற்படுத்துவதற்கு |
| (ஆ) | சபையின் தலங்கம சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை வழங்கப்படும் சேவை பெறுனர் களின் 20 கோவைகளை பரிசோதித்த போது அந்த ஆட்கள் நீண்ட காலமாக போதைப் பொருள் பாவணைக் காக பழகியிருந்ததுடன் அந்த நபர்கள் 2 வருடங்கள் முதல் 23 வருட காலம் போதைப்பொருள் பாவணை செய்திருந்தனர். இந்த சேவை பெறுனர்கனின் அனேகமானோர் சமூக குற்றங்களின் இறையாகி போதைப் பொருட்களுக்கு பழக்கப்பட்டுள்ளனர் என மேலும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறு நீண்ட நாட்களாக போதை பொருள் பாவணைக்கு அடிமையான ஆட்கள் 14 நாட்கள் அல்லது 2 | போதைப் பொருள் பாவணை மற்றும் உளம் சார்ந்த பழக்க நிலைமை மீது பல்வேறு நபர்களும் பல்வேறு வகையான சிகிச்சைகள், புனர்வாழ்வு அழிக்கப்படுவதுடன் மீண்டும் மீண்டும் ஈடுபடுத்தப்படும் போக்கொன்று ஒட்டுமொத்த செயன்முறையினுள் காணப்படும் நிலைமையாகும். பல்வேறு காரண காரணிகளை காட்டி மீண்டும் மீண்டும் தொடர்புபடுத்தப்படுவதுடன் அனைவருக்கும் சிகிச்கை அழித்தல் மற்றும் புனர்வாழ்வு அழித்தல் எமது கடமையாகவும் பொறுப்பு ஒன்றாகவும் காணப்படுகிறது. | போதைப் பொருள் பாவணையை குறைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்காக |

மாதங்களுக்கு புனர்வாழ்வு அளித்து சமூகமயப்படுத்துவதால் மீண்டும் மீண்டும் அவர்கள் போதைப் பொருட்கள் பாவணைக்கு தொடர்ச்சியாக தொடர்பு படுத்தப்படுகின்றனர்.

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ரூபா 330,484 தொகை பெறுமதியான 37 இரசாயனப் பொருட்களின் இருப்பு மீதியொன்று 2005 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 96,290 தொகை பெறுமதியான 03 வகையான இரசாயனப் பொருட்கள் 10 வருடங்களை அண்மித்த காலம் வினியோகிக்கப் படாமல் இருப்பு மீதியில் காட்டியிருந்ததினால் ரூபா 2,527,499 தொகைக்கான இருப்பு மீதியில் 426,774 இற்காக மீதியில் அதாவது 17 சதவீதம் பயன்படுத்தப்பட முடியாது என அவதானிக்ககப்பட்டன. | தேசிய போதைப் பொருள் ஆய்வு கூடத்தினால் போதை பொருட்கள் மற்றும் உள ஊக்குவிப்பு பொருட்களில் சட்ட முரணான வியாபாரத்திற்கு எதிராக உரிய சட்டங்களின் பிரகாரம் சட்டத்தின் கீழ் தனதாக்கப்பட்ட 254 பொருட்கள், நச்சு வகைகள், அபின் மற்றும் அபாயகர ஔடத வகைகள் சட்டத்தின் கீழ் தனதாக்கப்பட்ட 68 பொருட்கள், விளையாட்டு களின் போது பயன்படுத்தப்படும் தடை செய்யப்பட்ட ஊக்கி என கணிக்கப்படும் தனதாக்கப்பட்ட 180 பண்டங்களுக்காக ஆரம்ப விசாரணைகளை போலவே ஆரம்ப விசாரணைகளின் பெறுபேறுகளின் பிரகாரம் அந்த பெறுபேறுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்து வதற்காக உறுதிப்படுத்தும் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் தேசிய போதைப் பொருள் ஆய்வு கூடம் இடையறாமல் நடாத்தப்படுகின்ற சர்வதேச ஆய்வு கூட தரப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான பகுப்பாய்வு மற்றும் உரிய நிறுவனங்களின் தேவையின் மீது நாளாந்தம், ஆய்வு கூடத்திற்கு அனுப்பப்படும் சந்தேகத்திற்கு இடமான மாதிரிகளுக்காக மேற்கூறிய பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு தேவையான இரசாயனப் பொருட்கள் பரிசோதனை தேவைகளுக்கு ஏற்ப பயன்படுத்துதல் ஆய்வுகூடத்தில் இருத்தல் அத்தியவசியமாகும்.<br>அதன் காரணமாக பயன்படுத்த முடியாத 17% இரசாயனப் பொருட்களின் இருப்பு மற்றும் காலவதியாகிய 12 இரசாயனப் பொருட்களும் 2000 ஆண்டிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு அலுவல்களுக்காக கொள்வனவு செயற்பட்டிருந்ததுடன் அப்போது மேற்கொள்ளப்பட்டிருந்த | இருப்பு பதிவேடு நாளதுவரை ஆக்குவதற்கு மற்றும் காலவதியான இருப்புக்களை அகற்றுதல் |

| | | | |
|---|---|---|---|
| | | பகுப்பாய்விற்காக அந்த இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் தற்போது மேற்கொள்ளப்படும் நவீன உபகரணங்களை பயன்படுத்தி மிகவும் வினைத்திறனுடன் குறைந்த கிரயத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளுக்கு தேவைப் படாமையால் இந்த இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்து. மேலும் இந்த இரசாயனப் பொருட்களின் சில ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்ட போதிலும் பிந்திய காலங்களில் அந்த இரசாயனப் பொருட்களினால் நேரிடக் கூடிய பிரதிகூலமான சுகாதார நிலைமையை இனங்கண்ட உடன் ஆய்வு கூட பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்து. | |
| (ஆ) | 10 செயலாற்றுகை பரப்பு களில் போதை பொருட்கள் உளத் தூண்டல் பொருட்களுடன் அடங்கியுள்ளன என தீர்மானிக்கும் மாதிரிகளின் பகுப்பாய்வு, போதைப் பொருட்கள் கட்டுப்பாட்டுப் பரப்பு மற்றும் தொடர்புடைய சட்டத்தை செயற்படுத்தும் அதிகாரம் சபைகள் மற்றும் உரிய ஏனைய நிறுவனங்களுக்காக வினைத்திறன் மற்றும் அறிவு சார் வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள், தீய பயன்பாட்டு மருந்துக்காக ஜீவதத்துவ பரிணாம பொருட்களை இனங்காணல் மற்றும் பகுப்பாய்வு செய்தல், போதைப் பொருட்களுடன் தொடர்புடைய சட்டங்களை அமுல் நடத்தும் நிறுவனங்களின் உத்தியோக த்தர்களுக்கு நடத்தப்படும் கணினி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் சட்டத்தை செயற்படுத்தல் நிறுவனங்களுக்கான வெளிக்கள பரிசோதனை தொகுதிகளின் செயற்பாடு களை உறுதிப்படுத்தல் மற்றும் மீண்டும் தயாரித்தல் ஆகிய 5 | வீதி ஹெரொயின் விலை மற்றும் தூய்மை தன்மையிடையே தொடர்பினை இனங்காண்பதற்காக உரிய பகுப்பாய்வு மற்றும் புதிய ஐதாக்கல் அடங்கியுள்ளனவா என மேற்கொள்ளப்படும் பகுப்பாய்வு களுக்காக மாதிரிகள் பொலிஸ் போதைப் பொருள் அழிப்பு பணியத்தின் மூலமாகும் வழங்கப்படுகின்றது. எனினும் பொலிஸ் போதைப் பொருட்கள் அழிப்பு பனியகத்திற்கு இதற்காக வழங்கப்பட்ட பண ஒதுக்கீடு போதாமையின் காரணமாக பகுப்பாய்விற்காக கிடைத்துள்ள மாதிரிகளின் எண்ணிக்கையில் இலக்காகிய மாதிரிகளின் எண்ணிக்கையில் குறைவடைதல் ஒன்று ஏற்பட்டிருத்தல் முன்னேற்றம் 25% சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. மேலும் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாதிரிகள் பெறும் செயல்முறையை மிகவும் வினைத்திறனாக்குவதற்கு மது வரி திணைக்களம் மற்றும் இலங்கை பொலிஸ் மற்றும் அவ்வாறான சட்டத்தை அமுல் நடத்தும் ஏனைய நிறுவனங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | செயலாற்றல் மட்டத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | பரப்புக்களில் செயலாற்றல் எதிர்பார்த்த மட்டத்தை மிகைத்திருந்த போதிலும், வீதி ஹெரொயின்களின் விலை மற்றும் தூய்மைத் தன்மையை வெளிப்படுத்தி அங்கு காணப்படும் தொடர்பு மற்றும் புதிய ஐதாக்கள் பொருட்களை இனங்காண்பதற்காக மேற் கொள்ளப்படும் ஆய்வு செயற்திட்டங்களின் செயலாற்றல் 25 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | 2008 இன் 01 இலக்க மருந்து வகைகள் மற்றும் உளத் தூண்டல் பொருட்கள் சட்ட முரணாக வியாபாரம் செய்வதற்கு எதிரான அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தை செயற்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட 2010 இன் 01 ஆம் இலக்க முன்னோடி நிர்வாக அதிகார சபையின் கட்டளை III ஆம் பகுதியில் 13 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் அங்கத்தவர்களினால் குறைந்த அளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஏனும் அனுமதிப்பத்திரகாரர் கள் பதிவு செய்யப்பட்டுள்ள இடத்திற்கு வந்து சட்டத்தில் அறுதியாக குறிப்பிட்டுள்ள பொருட்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாக மேற்பார்வை செய்யப்பட வேண்டுமெனினும் அந்த கட்டளையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக முன்னோடி நிர்வாகப் பிரிவின் கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் தேவையான மனித வள பற்றாக்குறையின் காரணமாக ஒரு வருடத்திற்கு ஒரு முறை வளவு மேற்பார்வை விடயங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்கு மேலதிகமாக இந்த கருமங்களை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு சபையின் தரப்பினர்களான பொலிஸ், மது வரித் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக காணப்படும் இயலுமை தொடர்பாக கலந்துரையாடப்படுகின்றது. | குறிப்பிட்ட காலத்தில் முறையான மேற்பார்வை மேற்கொள் வதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | போதைப் பொருள் பயன்படுத்தலின் பரவல் மற்றும் நவீன போக்கு தொடர்பாக ஆய்வு 2016/2017 ஆய்வு அறிக்கையின் பிரகாரம் போதைப் பொருள் பாவணை செய்யும் வயது தொகுதி, 14 வருடங்களுக்கு குறைவான 13 சதவீதம், 15-19 வயதிற்கு இடைப்பட்டோர் 16 சதவீதம் மற்றும் 20-24 வயதிற்கு இடைப்பட்டோர் 19 சதவீதத்தை பிரதிநிதிப்படுத் தியது. இங்கு ஆள் ஒருவரின் முதல் பயன்படுத்திய வயது, அதாவது பரீட்சித்துப் பார்ப்பதற்காக, வியப்பை தூண்டுவதற்காக பிரச்சினை சந்தர்ப்பங்களில், சினேகிதர் களின் தாக்கத்தினால், வியப்பு வினோதம் ஆகிய காரணங்களினால் முதலில் பயன்படுத்தும் வயது புதிய இளம் வயது அல்லது அதற்கு பிந்திய காலம் என குறிப்பட்டுள்ளது. போதைப் பொருள் தடுப்புப் பொருள், பயிற்சி, வழங்கள் மற்றும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களில் அனேகமாக பாடசாலை மாணவர்களை இலக்காக வைத்து மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் இலங்கையில் ஒட்டுமொத்த பாடசாலை களின் எண்ணிக்கையில் 10,102 இல் 2013 ஆண்டு முதல் 2018 அக்தோபர் வரை பயிற்சி வழங்கள் நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த பாடசாலைகளின் எண்ணிக்கை 2719 தொகை ஆகும். அதாவது 26 சதவீதமான மிகவும் குறைந்த விகிதாசாரத்தில் காணப்பட்டது. | அந்த அவதானிப்பில் காட்டப்பட்டு ள்ளவாறு 10,102 பாடசாலைகளில் அதாவது 2,719 தொகை அதாவது 26% ஐ விட குறைந்த அளவு எண்ணிக்கையை நாங்கள் நெருங்கியுள்ளோம் என்பது உண்மை எனினும் 14 உத்தியோகத்தர்களைப் பயன்படுத்தி 10,102 பாடசாலைகளை உள்ளடக்குவது நடைமுறை சாத்தியமானதல்ல. அதன் காரணமாக நோய்த்தடுப்பு கல்விப் பிரிவு பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் பயிற்சி வழங்குவதற்கான பயிற்சி வழங்கப்படுகின்றது. அதன் ஊடாக மாணவர்கள் முன்னிலையில் விளிக்கும் அறிவு அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. அரசாங்க உத்தியோகத்தர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவது ஊடாகவும் மறைவான முறையில் இந்த கருமங்கள் நடைபெறுகின்றன. எங்கள் உத்தியோகத்தர்கள் நேரடியாக நிறைவேற்றிய செயற்பாடுகள் மாத்திரம் இந்த பதிவேட்டில் அடங்கியுள்ளன. ஏனைய செயற்பாடுகள் இதில் அடங்கியிருக்கவில்லை. | விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்து மாணவர்களு க்கும் கிடைக்கும் விதத்தில் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | போதைப் பொருட்கள் சந்தைப்படுத்தல் மற்றும் வியாபாரம் செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது பெண்கள் அதனோடு தொடர்பு கொண்டுள்ள போக்கு உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதால் பெண்கள் சந்தைப்படுத்தல் தொடர்பாக காட்டும் பங்களிப்பினை குறைப்பதற்காக பெண்களி டையே விளிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும். எனினும் பெண்களை இலக்காக கொண்டு மேற்கொள்ளப்பட்ட நோய்த்தடுப்பு கல்வி மற்றும் பயிற்சி வழங்கள் நிகழ்ச்சித் திட்டங்கள் கடந்த 05 ஆண்டுகளின் போது அவதானிக்கப்படவில்லை. | பெண்களை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் ஆண்களை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் என வேறுபாடுகள் அறிக்கையில் காணப்படவில்லை. இலகுவான உதாரணமாக சமூக நிகழ்சித் திட்டங்கள் என்ற தலைப்பினை எடுத்த போது அவை பெண்களைப் போலவே ஆண்களும் இலக்காகும். (எல்லா நிகழ்ச்சித் திட்டங்களினதும் பங்களிப்பு இதுவே) இங்கு ஆண் பெண் வகுப்பாகத் (Gender) தின் ஊடாக போதைப் பொருட்களின் காரணமாக ஏற்படும் வித்தியாசம் மாத்திரமன்றி (Sex) பாலியல் நிலைமையில் மேற்கொள்ளும் போதைப் பொருட்கள் பயன்படுத்துவதில் போக்குகளும் விஞ்ஞான ரீதியாக நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக சமர்ப்பிக்கப்படும் ஒரே ஒரு நிறுவனம் தேசிய அபாயகர மருந்து பொருட்கள் கட்டுப்பாட்டு சபையின் நோய்தடுப்பு கல்வி மற்றும் பயிற்சி வழங்கும் பிரிவு ஆகும் என தயக்கமின்றி குறிப்பிட விரும்புகின்றோம். | நோய் தடுப்புக் கல்விப் பிரிவில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பெண்களை இலக்காகக் கொண்ட நிகழ்ச்தி திட்டங்கள் கூடிய எண்ணிக்கை யானவை மேற்கொள் வதற்காக |

### 3.5 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹோமாகமவில் அமைந்துள்ள ரூபா 4,027,518 தொகை கிரயத்தையுடைய 40 பர்சஸ் காணி 2014 ஏப்ரல் 30 திகதி 30 வருட குத்தகை அடிப்படையில் போதை ஊக்க மருந்து ஊசி ஏற்றிக் கொள்ளும் நபர்களுக்கு சிகிச்சை பெறுவதற்கு மற்றும் அவர்கள் புனர்வாழ்வளிக்கும் நோக்கில் கொள்வனவு செய்திருந்த போதிலும் மீளாய்வாண்டு வரை 5 வருடங்களாக பயன்தரு கருமங்களில் ஈடுபடுத்தாமல் தொடர்ந்தும் பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றது. | இந்த ஹோமாகம காணி அமைந்துள்ள பெருநகர் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் தொழிநுட்ப நகர அபிவிருத்திக்கான செயற்திட்டம் தொடர்பாக இனங்கண்டிருப்பதனால் அங்கு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையம் நிறுவுவதற்கு அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. இந்த காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தானதுடன் இந்த காணியை சபைக்கு வழங்குவதற்கான குத்தகை உடன்படிக்கையை தயாரிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டப் பிரிவுக்கு அனுப்பியிருப்பதாக பெருநகர் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சினால் 2019.03.29 திகதிய 10/8/2745 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவித்துள்ளது. அதே போல் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் உடன்படிக்கை தயாரிப்பதற்கான கட்டணமாக ரூபா 82,142.20 தொகை செலுத்தும் படி அறிவித்து 13/1/1615 இலக்கங் கொண்ட 2019.05.13 திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்திருந்தது. | பலனுள்ள கருமத்திற்கு பயன்படுத்து வதற்காக |

| | | |
|---|---|---|
| (ஆ) ரூபா 3,884,160 தொகை செலவிடப்பட்டு தொழில்நுட்ப ஆலோசனை உறுதி ஒன்றினை பெற்றிருக்காமல் நிறுவப்பட்டிருந்த LED வீடியோ பனல் கணக்காய்வுத் திகதியாகிய 2019 மார்ச் 12 திகதி வரை செயற்படாத நிலையில் காணப்பட்டது. | இந்த வீடியோ பலகைக்காக 2018.04.30 திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்படு நிலைமைக்கு மாற்றுவதற்காக |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 6,984,350 பெறுமதியான 06 பெறுகை கருமங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | பெறுகை கருமங்கள் நிறை வேற்றப் படாமைக்கான காரணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.<br>நவதிகன்ன நிலையத்தின் கழிப்பறை முறைமை - தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கை தாமதமாகிய காரணத்தினால் நேரிட்டதுடன் அவை 2019 ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டு தற்போது குறிப்பிட்ட கருமம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.<br>கண்டி நிலையத்தின் தாழ்வாரத்தை திருத்துவதற்கும் - இந்தக் கருமம் 2019 ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் உட்படுத்தி தற்போது குறிப்பிட்ட கருமம் பூர்த்தி செய்யப்பட்டு குறிப்பிட்ட பணம் செலுத்தப்பட்டுள்ளது.<br>கண்டி நிலையத்தின் நீர் வடிமுனையுடனான பேஸன் இதற்காக பொருத்துதல் - கிடைத்திருந்த கூறுவிலைகளில் பிழைகள் காணப்பட்டமையால் கூறுவிலைகள் திறக்கும் குழுவினால் இரத்துச் செய்திருந்தது.<br>காலி நிலையத்தில் கழிப்பறை முறைமை - இந்த கருமத்திற்கு விலை கூறல் எதுவும் கிடைத்திருக்கவில்லை.<br>ஆய்வு கூடத்தின் தரவு முறைமை – தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு தகுதியான உத்தியோகத்தர் ஒருவர் தேடிப் பெற முடியாமையினால் மற்றும் இறுதி விவரக் குறிப்பு தயாரிப்பதில் தாமதம் காரணமாக இந்த கருமத்தை மேற்கொள்ள முடியாதிருந்தது.<br>Narcotic Trace Detector - இந்த விடயத்தின் பெறுமதி ரூபா 3,800,000 தொகையாகக் காணப்பட்டதுடன் வழங்குனரினால் நாணயப் பத்திரத்தின் மூலம் கொடுப்பனவு செய்யும் படி | பெறுகை வழிகாட்டலின் படி செயற்படுவதற்காக |

| | | |
|---|---|---|
| | அறிவித்துள்ளது. திறைசேரியில் இருந்து போதியளவு பணம் கிடைக்காமையால் சபையின் நடைமுறைக் கணக்கு மேற்கூறிய தொகை காணப்படாமையால் நாணயப் பத்திரம் திறப்பதற்கு முடியாதிருந்தது. | |
| (ஆ) பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் 34 கணினிகள் கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு டென்டர் வழங்கப்பட்டிருந்தது. எனினும் நிறுவனத்தில் இருப்பு காணப்படாமை யினால் 06 கணினிகள் மாத்திரம் ரூபா 530,250 தொகைக்கு வழங்கியிருந்த மையால் செயலாற்றுகை பிணை முறியின் பொறுப்பு தொடர்பாக வழங்குனருக்கு அறிவிக்காமல் மற்றும் அந்த நிறுவனத்துடன் இணங்கியிருந்த பொது நிபந்தனை 09 மற்றும் கட்டம் III (Section III) இணங்கியிருந்ததைமை தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். பெறுகை அலுவல்கள் 2018/02/16 திகதி வரை நிர்வாக பிரிவுக்கு சாட்டப்பட்டிருந்த துடன் அதன் பின்னர் முகாமைத்துவத்தின் தீர்மானம் ஒன்றின் மீது அதன் மூலதன பகுதி கணக்கு பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டது. அது முதல் பெறுகை வழிகாட்டலின் படி செயற்படுவதற்கு குறிப்பிட்ட பிரிவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டலின் படி செயற்படுத்தல் |

### 3.7 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் 2018 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு அங்கீகரிக்கப் பட்ட பதவியணி 339 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணி 240 ஆக காணப்பட்ட மையால் ஊழியர் 99 பேரின் வெற்றிடமொன்று காணப்பட்டது. முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2018 ஆண்டிற்கான வெற்றிடங்களில் 10 பேர் சேர்ப்பதற்காக 2018 அக்தோபர் 19 திகதி அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் சபை அந்த வெற்றிடங்களை நிரப்பி இருக்கவில்லை. | 2018 ஆண்டிற்கான முகாமைத் துவ உதவியாளர்கள் 05 பேர் மற்றும் ஆலோசனை உதவியாளர்கள் 05 பேர் சேர்ப்பதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் 2018.08.30 திகதி அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறிய வெற்றிடங்களை நிரப்புவதற் காக 2018.09.28 திகதி சபையின் உத்தியோக பூர்வ இணையத் தளத்தில் அறிவித்தல் வெளியிடப்பட்டு விண்ணப்பம் கோரப்பட்டது. அதன் பின்னர் எங்கள் சபை 2018 இறுதிக் காலாண்டில் ஏற்பட்ட அரசியல் நிலையற்ற தன்மையின் காரணமாக மற்றும் அமைச்சுக்கள் மாற்றமடைந்த காரணத்தினால் ஆட்சேர்த்தல் சிக்கல் தன்மையாக மாறியது. எங்கள் அமைச்சு பாதுகாப்பு அமைச்சின் கீழ் வந்தது என உறுதியான பின்னர் 2019 ஜனவரி மாதத்தில் நேர்முகப் பரீட்சை நடாத்தி தெரிவு செய்யப்பட்ட 5 முகாமைத்தவ உதவியாளர்கள் மற்றும் 04 ஆலோசக உதவியாளர் 2019.03.05 முதல் கடமைக்கு சேர்க்கப்பட்டனர். | |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆண்டின் போது சபையின் உள்ளகக் கணக்காய்வாளரினால் 07 உள்ளகக் கணக்காய்வு கருமங்களின் கீழ் திட்டமிடப் பட்டிருந்த போதிலும் அவற்றில் ஒரு கருமமும் நிறைவேற்றப் பட்டிருக்காததுடன் 2018 ஆண்டின் போது சபைக்கு அனுப்பப்பட்ட 17 தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு ஐய வினாக்களில் 02 இற்கு பதில் அனுப்பி இருத்தலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் 4 ஒழுங்கு செய்திருந்தல். ஊழியர்கள் வருகை தொடர்பாக ஒரு கணக்காய்வு ஐய வினா சமர்பித்தலும் மேற்கொள்ளப்பட்டி ருந்ததுடன் 2018 ஜனவரி முதல் திசெம்பர் வரை சம்பளமாக ரூபா 576,469 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | சபையின் உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் பரிசோதனை செய்வதற்கான சட்டமும் ஒழுங்கும் பிரிவின் மேலதிக செயலாளரின் COPE/2019/01 கொண்ட 2019.05.27 திகதிய கடிதத்தின் மூலம் குழு ஒன்று நியமனம் செய்யப்பட் டிருந்ததுடன் அவ் அறிக்கை ஒரு மாதத்தில் சமர்ப்பிக்கும் படி அறிவித்து கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. அதே போல் அதன் பிரதி ஒன்று உங்கள் கவனத்திற்கு அனுப்பப்பட்டதுடன் அந்த அறிக்கை கிடைத்தவுடன் இதற்கான அறுதியான பதில் ஒன்று அனுப்புவதற்காக குறித்துக் கொண்டேன். | உள்ளகக் கணக்காய்வின் மூலம் உயர்ந்த செயலாற்றல் ஒன்று நிறைவேற்றுவதற்காக |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டு செலவுகளை உள்ளவாறான செலவுகளுடன் இணக்கம் செய்த போது 15 செலவு விடயங்கள் தொடர்பாக - 127 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | சபைக்கு தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு திறைசேரி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செலவு விடயங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுல் அந்த செலவு விடயங்கள் விரிவாக சமர்ப்பித்த காரணத்தினால் இந்த முரண்கள் ஏற்பட்டிருந்தது. பாதீடு சரியான முறையில் முகாமைத்துவம் செய்வதற் காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பாதீடு சரியாக தயாரிப்பதற்காக |